# நமது நம்பிக்கை

(ஒரு ஷீயா அறிஞரின் விளக்கம்)

ஆயத்துல்லாஹ் மகாரிம் ஷீராஸீ

www.ketab.ir

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாலனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்

57

ஆய்வு நிலையம்

**Namadhu Nambikkai**
(Our beliefs)
Tamil translation of *I'tiqad e Maa'*(Persian Language)
By: Ayatollah Makaarim Shirazi of Qom, Iran.

First Edition: sep 2005
Copies: 2000
Translated and Published in Iran by:
Int'l Center for Islamic Studies Publications,
Shaheed Muntazari Road, Qom,
Islamic Republic of Iran.
Tel. 0098 251 7749875
ISBN: 964-7741-94-4
www.eshraaq.com E-mail: public-relations@ Qomicis.com
Price: RS 100
© All Rights Reserved for I.C.I.S., Qom, Iran

www.ketab.ir

# பதிப்புரை

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மியான்மார் போன்ற நாடுகளில் ஏராளமான தமிழ் பேசும் ஷீயாக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழில் ஷீயாக்கள் பற்றிய நூல்கள் அரிதாக இருப்பது அவர்களுக்கும் அவர்களைப் பற்றி வாசித்தறிந்து கொள்ள விரும்பும் ஏனையோருக்கும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த கால் நூற்றாண்டு காலத்துக்குள் மத்திய கிழக்கு நாடுகளில். குறிப்பாக ஈரானிலும் இராக்கிலும் நடந்த மாற்றங்கள் காரணமாக ஷீயா முஸ்லிம்கள் பற்றி தொடர்பு சாதனங்கள் பேசத் தொடங்கின. ஷீயாக்ள் பற்றிய தாறுமாறான எண்ணக் கருக்கள் உலக முஸ்லிம்களிடையே பரவ விடப்பட்டன.

இதனால் ஷீயாக்களின் நம்பிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி ஆதாரபூர்வமாக விளக்கும் நூல்களின் தேவை நீண்ட காலமாகவே உணரப்பட்டு வந்தது. அப்பாரிய இடைவெளியை நிரப்புவதில் இச்சிறு நூல் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் நமக்கு நிறையவே நம்பிக்கையுண்டு.

இதனை யாத்த பேரறிஞர் ஆயத்துல்லாஹ் மகாரிம் ஷீராஸீ இன்றைய ஷீயா உலகில் கண்ணியத்தோடு நோக்கப்படுகின்ற பெரும் சிந்தனையாளர்களுள் ஒருவராவார். நூற்றுக் கணக்கான நூற்களை யாத்துள்ள அன்னாரின் 25 வால்யூம்கள் கொண்ட தப்ஸீர் அல் அம்ஸல் அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட தப்ஸீர்களில் தலைசிறந்த ஒன்றாகும். அவர், பிக்ஹ், உஸூல், ஹதீஸ், தத்ததுவ ஞானம், வரலாறு, அரசியல், மொழி எனப் பல்வேறு

துறைகளில் பாண்டித்தியம் மிக்கவர் ஆவார். அத்தகைய ஒருவர் ஷீயாக்கள் பற்றி விளக்குவதால் இது மிக்க ஆதாரபூர்வமானதும் நம்பத் தகுந்ததுமான தகவல்களையே கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது இந்நூலின் முக்கிய சிறப்பம்சமாகும்.

உண்மையைத் தேடி அறிந்து கொள்ள விரும்புகின்ற அனைவருக்கும் இந்நூல் பயன் மிக்கதாக அமையும் என நம்புகின்றோம்.

வெளியீட்டாளர்

www.ketab.ir

# நூலாசிரியரின் முன்னுரை

நமது நம்பிக்கை என்னும் நூல் ஷீஆ மத்ஹபின் அடிப்படைக் கொள்கைகளையும் அதனையொட்டிய பிரிவுகளையும் விபரிக்கும் நோக்கில் எழுதப்பட்டதாகும். இந்நூல் சகலரும் விளங்கிக் கொள்ளும் வகையில் மிக எளிய நடையில் எழுதப் பட்டுள்ளது. இதைப் படிப்பதன் மூலம் ஷீஆக்கள் பற்றியும் இறைவன், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி, மலக்குமார், அல்குர்ஆன், மறுமை நாள் பற்றிய அவர்களது நம்பிக்கைகளையும் அறிந்து கொள்ள முடியும்.

அல்ஹம்து லில்லாஹ் இந்நூல் சர்வதேச இஸ்லாமிய கல்வி நிலையத்தால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு அம்மொழி பேசும் மக்களுக்கு தருவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன். இறைவன் எங்களையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் நல்லடியார்களின் கூட்டத்தில் சேர்த்து மறுமையில் அஹ்லுல் பைத்தினர்களின் ஷபாஅத்தையும் பெற்றுத் தருவானாக.

ஆயத்துல்லாஹ் மகாரிம் ஷீராஸீ

கும்,
ஈரான் இஸ்லாமியக் குடியரசு,
ஜூன், 2005.

www.ketab.ir

## உள்ளடக்கம்


1. ஏகத்துவம் ....................09
2. நபித்துவம் ....................23
3. குர்ஆன் .......................37
4. மறுமை வாழ்வு...............53
5. இமாமத் ........................67
6. முக்கிய விசயங்கள்.......85


www.ketab.ir